டிஜிட்டல் டெய்லி

அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண் வெல்லர்ஸ்

agridoctor.in | 14.11.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 123 | Madurai | Online Edition

விவசாயிகளின் பாரம்பரிய அறிவை அறிவியல் ஆராய்ச்சி, சந்தை வாய்ப்புகளுடன் இணைக்க வேண்டும்

பிரதமரின் முதன்மை செயலாளர் வேண்டுகோள்!

புது தில்லி, நவ.13

இந்தியாவின் வேளாண் பல்லுயிர் பெருக்கத்தின் பாதுகாவலர் களாகவும், புதுமைக் கண்டுபிடிப்பாளர்களாகவும், விவசாயிகளை அங்கீகரிக்க வேண்டும் என்றும் அவர்களின் பாரம்பரிய அறிவை அறிவியல் ஆராய்ச்சி, விதை அமைப்புகள், சந்தை வாய்ப்பு களுடன் இணைக்க வேண்டும் என்று பிரதமரின் முதன்மை செயலாளர் டாக்டர் பி கே மிஸ்ரா அழைப்பு விடுத்துள்ளார். தாவர ரகங்கள், விவசாயிகள் உரிமை பாதுகாப்பு ஆணையத்தின் 22-வது நிறுவன நாள் மற்றும் தாவர மரபணு மீட்பவருக்கான விருது வழங்கும் விழாவில் உரையாற்றிய டாக்டர் மிஸ்ரா, இந்நிகழ்வு 2001-ம் ஆண்டின் தாவர ரகங்கள், விவசாயிகள் உரிமைகள் பாதுகாப்பு சட்டத்தின் 25-ம் ஆண்டு நிறைவைக் குறிப்பதாக தெரிவித்தார்.

பாரம்பரிய அறிவு, உணவு பண்பாடுகள், சமூக வாழ்வா தாரங்களைப் பாதுகாக்கும் அதே சூழலில் பருவநிலை மாற்றம், நீர் பற்றாக்குறை, பூச்சிகள், நோய்களை எதிர்கொள்ளக்கூடிய பெயர் களை உருவாக்குவதற்கு இந்தியாவின் வளமான வேளாண் பல்லுயிர் பெருக்கம் முக்கியத்துவம் வாய்ந்தது என்று அவர் கூறினார். இந்தியாவின் 22 வேளாண் பல்லுயிர் பெருக்க மையங் களை அவர் சுட்டிக்காட்டினார். அத்துடன் 2012-ம் ஆண்டின் உணவு வேளாண் அமைப்பால் உலகளவில் முக்கிய வேளாண் பாரம்பரிய அமைப்பாக அங்கீகரிக்கப்பட்ட ஒடிசாவின் கோராபுட்டை சமூகம் சார்ந்த தலைமையிலான பாதுகாப்பிற்கு உதாரணமாக சுட்டிக் காட்டினார்.

இந்தியாவின் விவசாயிகளுக்கான உரிமைகளின் தனித்துவமான கட்டமைப்பை எடுத்துரைத்த டாக்டர் மிஸ்ரா, இச்சட்டம் தாவர வளர்ப் பாளர்களின் உரிமைகளை விவசாயிகளை தாவர வகைகளின் பாதுகாவலர்களை பயிரிடுவோர்கள், மேம்பாட்டாளர்களாக அங்கீ கரிப்பதோடு சமநிலைப்படுத்துவதாக கூறினார். தாவர அடிப்படை யிலான தாவர வகை வன உரிமைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப் பட்ட வகைகளில் சுமார் பாதி அளவு விவசாயிகளின் வகைகளாகும். மரபணு வளங்களைப் பாதுகாக்கும் சமூகத் தினருக்கும் நியாய மான பலன்களை உறுதி செய்வதில் பலன்பகிர்வு விதிமுறைகள், தேசிய மரபணு நிதியத்தின் பங்களிப்பு ஆகியவை குறித்தும் வலியுறுத்தினார்.

விவசாயிகளுக்கு வாழைப்பயிர் சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி!



ஈரோடு, நவ.13

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டாரம், மேவாணி கிராமத்தில் ஜே.கே.கே.முனிராஜா வேளாண்மை அறிவியல் கல்லூரியின் ஊரக வேளாண் அனுபவ பயிற்சி திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு வாழை சாகுபடியில் பயன்படும் Pairing மற்றும் Pralinage தொழில்நுட்பங்கள் குறித்த செயல்விளக்கப் பயிற்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சி வேளாண்மை உதவி அலுவலர் (AAO) மோனிகா தலைமையில் நடைபெற்றது. இதில் வாழைக்கன்றுகளை நடவு செய்வதற்கு முன்பு Pairing முறையில் தேவையற்ற பகுதிகளை அகற்றுதல் மற்றும் Pralinage முறையில் வேர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் பசை கலவை பூசுதல் போன்ற தொழில் நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கத்துடன் எடுத் துரைக்கப்பட்டது. மேலும், இத்தொழில் நுட்பங்களின் முக்கியத் துவம், பயன்கள் மற்றும் வாழைக்கன்றுகளின் ஆரம்பகால வளர்ச்சியை மேம்படுத்துவதில் அவற்றின் பங்கு குறித்தும் விளக்கப்பட்டது. இப்பயிற்சியில் மேவாணி கிராம விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தொழில்நுட்பங்களைப் பயிற்சி செய்து பயன் பெற்றனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தக்காளி மற்றும் பப்பாளியிலிருந்து மதிப்பூட்டப் பட்ட உணவுப்பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி

கோயம்புத்தூர், நவ.13

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தக்காளி மற்றும் பப்பாளியிலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி 17.11.26 மற்றும் 18.11.26 ஆகிய இரண்டு நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை, அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் (பேருந்து நிறுத்தம் : வாயில் எண்.7, மருதமலை சாலை வழி) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூரில் நடைபெறும்.

கீழ்க்காணும் மதிப்பூட்டப்பட்ட தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி அளிக்கப்படவுள்ளது. அவையாவன

பப்பாளி – பழரச பானம், தயார் நிலைபானம், கேண்டி (மிட்டாய்)

தக்காளி – ஊறுகாய், சூப், சாஸ், ஜாம், கெட்சப், உலர வைக்கப் பட்ட தக்காளி மற்றும் விழுது

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1500 + GST 18%) – பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 3. தொலைபேசி எண் : 94885 18268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் கடந்த 10.11.26 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டின் நீர்நிலைகள் புனரமைப்பில் அரசு சாரா அமைப்புகள் மற்றும் தன்னார்வலர்களின் பங்களிப்பை ஊக்குவிக்க, இணையவழியில் தடையின்மைச் சான்றிதழ்களைப் பெறுவதற் காக நீர்வளத் துறையின் சார்பில் உருவாக் கப்பட்டுள்ள 'ஏரி' இ ணை ய த ள த் தை த் (https://eri.tn.gov.in) தொடங்கி வைத்தார்.



அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

எல்லா நாளும்
தள்ளுபடி உண்டு
உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல்
நகை எடுக்க வரும்போது
அக்ரி டாக்டர் வாசகர்
என்று அறிமுகப் படுத்திக்
கொண்டு சிறப்பான
சேவையையும், பிரத்யேக
தள்ளுபடியும் பெறுங்கள்.
இந்த தள்ளுபடி உங்களுக்கு
மட்டுமே அதுவும் எல்லா
நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும்
நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை
எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.
96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

விவசாயிகள் அடையாள எண் பதிவை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ஆய்வு



புதுக்கோட்டை, நவ.13

புதுக்கோட்டை வட்டாரத்தில் விவசாயிகள் நில உடமைகள் பதிவு செய்யம் முகாமினை மாவட்ட கண்காணிப்பு அலுவலரும் வேளாண்மை இணை இயக்குநர் (விதை சான்றளிப்பு துறை) சாந்தி ஆய்வு செய்தார்கள்.

இது குறித்து புதுக்கோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அன்பரசன், வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில், புதுக் கோட்டை வட்டாரத்தில் விவசாயிகள் நில உடமைகளை பதிவு செய்து தனித்துவ அடையாள எண் வழங்குவதற்கான முகாம்கள் அனைத்து வருவாய் கிராமங்களிலும் நடைபெற்று வருகின்றன. இப்பணியானது வேளாண்மைத் துறை, தோட்டகலைத் துறை, வேளாண்மை பொறியியல் துறை, வேளாண் விற்பனை துறை மற்றும் விதை சான்று துறை சார்ந்த அலுவலர்களால் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

வரும் காலங்களில் விவசாய அடையாள எண் வைத்துள்ள விவசாயிகளுக்கு மட்டுமே பிரதம மந்திரி கௌரவ நிதி (பிஎம்கிசான்) திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் வழங்கப்படும் ரூ.6000 உதவி தொகை பெற இயலும். மேலும் மத்திய மற்றும் மாநில அரசு திட்டங்களின் மானியங்கள், மானிய விலையில் உரங்கள், விதைகள், பயிர் காப்பீடு, பேரிடர் நிவாரண நிதி போன்றவைகளில் விவசாயிகள் பயனடைய இந்த அடையாள எண் கட்டாயமாக்கப் படுகிறது.

புதுக்கோட்டை வட்டாரம் பெருங்களூர் வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட வெள்ளவெட்டான் விடுதி கிராமத்தில் நடைபெற்ற விவ சாயிகள் அடையாள எண் பதிவு முகாமினை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் வேளாண்மை இணை இயக்குநர் (விதை சான்றளிப்பு துறை) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

ஆய்வின் போது விவசாயிகளிடம் இதுவரை நில உடமைகளை பதிவு செய்யாத விவசாயிகள் தங்களது பகுதியில் நடைபெறும் முகாம்களிலோ அல்லது தங்களது வேளாண்மை விவரிவாக்க மையங்களிலோ அல்லது அருகாமையில் உள்ள பொது சேவை

மையங்களில் நேரடியாக அணுகி தங்கள் பெயரில் உள்ள நில ஆவணங்கள் (பட்டா, சிட்டா), ஆதார் எண் மற்றும் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட கைபேசி எண் போன்ற ஆவணங் களை கொண்டு விவசாய அடையாள எண் பதிவு செய்து தொடர்ந்து வேளாண் திட்டங்களை பயன்பெறுமாறு கேட்டு கொண்டார்கள்.

விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி

கடலூர், நவ.13

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தா சலம் சார்பாக 13.11.26 அன்று, ஸ்ரீமுஷ்ணம், பரங்கிப்பேட்டை மற்றும் மேல்புவனகிரி வட்டாரத்தில் உள்ள கோடிநத்தம், குரியாமங்களம் மற்றும் சுத்துக்குழி ஆகிய கிராமங்களில், விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி நடைப்பெற்றது.



இந்நிகழ்ச்சியை மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் க.நடராஜன், துவக்கி வைத்து, மண்வளம் பாதுகாக்கும் வழிமுறைகள் பற்றி எடுத்துரைத்தார். இதில் முனைவர் கண்ணன், முனைவர் சிவசங்கர் மற்றும் முனைவர் கலைச்செல்வி ஆகியோர் கலந்துக் கொண்டு, நிலங்களின் சத்துக்களுக்கு ஏற்றவாறு உர பரிந் துரையும், யூரியா, மற்றும் டி.ஏ.பி அதிகமாக பயன்படுத்துவதால் நிலத்திற்கு ஏற்படும் தீமைகளை பற்றி விளக்கினார். உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள் மற்றும் தொழு உரங்கள் பயன்பாடுகளை அதிகரிப்பதன் மூலம் மண்ணில் பேரூட்டம் மற்றும் நுண்ணூட்ட சத்துக்கள் மேம்பாடு பற்றியும் மற்றும் மண்ணிற்கு உரமிடும் போதுமண்வள அட்டையில் பரிந்துரைத்த உர பரிந்துரைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தினார். இந்நிகழ்ச்சியில் வேளாண்மை துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக் கொண்டு மத்திய மாநில திட்டங்கள் பற்றி தெளிவாக விவசாயிகளுக்கு விளக்கினர்.

இப்பயிற்சியில் கடலூர் மாவட்டம், ஸ்ரீமுஷ்ணம், பரங்கிப்பேட்டை மற்றும் மேல்புவனகிரி வட்டாரத்தை சேர்ந்த 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

ஜனஜாதிய கௌரவ் திவாஸ்-பழங்குடியினர் பெருமை தினம் (நவம்பர் 1-15) விழிப்புணர்வு முகாம்

கோயம்புத்தூர், நவ.13

கோயம்புத்தூர் மாவட்ட வேளாண் அறிவியல் நிலையத்தின் (ICAR – KVK Coimbatore) சார்பில், நவம்பர் 1 முதல் 15ஆம் தேதி வரை காரமடை, தொண்டாமுத்தூர் மற்றும் பெரியநாயக்கன்பாளையம் வட்டாரங்களில் உள்ள பழங்குடியின கிராமங்களில் ஜனஜாதிய கௌரவ் திவாஸ் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. சுதந்திரப் போராட்ட வீரர் பகவான் பிர்சா முண்டாவின் வாழ்க்கை வரலாறு, தியாகங்கள் மற்றும் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்கான பங்களிப்புகள் குறித்தும், மத்திய மற்றும் தமிழ்நாடு அரசின் பழங்குடியினர் நலத்திட்டங்கள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.



இதன் ஒரு பகுதியாக, பாலமலை கிராமத்தில் CTRT அறக் கட்டளை, IIHR பெங்களூரு மற்றும் வேளாண் அறிவியல் நிலையம் இணைந்து தோட்டக்கலைத் தொழில்நுட்பங்கள் குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் இடுபொருட்கள் வழங்கும் நிகழ்ச்சியை நடத்தின. இதில் இலாபகரமான தோட்டக்கலைத் தொழில் நுட்பங்கள், அரசு நலத்திட்டங்கள் மற்றும் வேளாண் அறிவியல் நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து வல்லுநர்கள் விளக்கினர்.

மேலும், காய்கறி விதைத் தொகுப்புகள், பழக்கன்றுகள், நுண்ணூட்டக் கலவை மற்றும் வேப்பம் சார்ந்த சோப்பு உள்ளிட்ட இடுபொருட்கள் பழங்குடியினப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

மேலும், காரமடை வட்டாரம், பில்லூர் அணைப் பகுதியில் உள்ள பழங்குடியின பள்ளி மாணவர்களுக்கு பழங்குடியின தலைவர்கள் மற்றும் அவர்களின் பங்களிப்புகள் குறித்த போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சிகள் மூலம் பழங்குடியின மக்களிடையே வரலாற்றுப் பெருமை, கல்வி, அரசு நலத்திட்டங்கள் மற்றும் வாழ்வாதார மேம்பாடு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

நெல் சாகுபடியில் இலைச் சுருட்டுப் புழு தாக்குதலை கட்டுப்படுத்த வேளாண்மை இணை இயக்குநர் ஆலோசனை

புதுக்கோட்டை, நவ.13

புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்பொழுது நிலவும் தட்பவெப்பநிலை காரணமாக சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிரில் செம்பேன், தண்டு துளைப்பான் மற்றும் இலைச்சுருட்டுப்புழு ஆகிய பூச்சி களின் தாக்குதல் ஆங்காங்கே தென்படுவதால், விவசாயிகள் ஒருங் கிணைந்த முறையில் கட்டுப்படுத்திட வேளாண்மை இணை இயக்குநர் (பொ) ந.சண்முகஜெயந்தி ஆலோசனை தெரிவித்துள்ளார்.



செம்பேன்

செம்பேன் எனப்படும் சிவப்பு சிலந்தி தாக்குதலின்போது, இலையின் அடிப்பகுதியில் சிவப்பு அல்லது மஞ்சள் புள்ளிகள் தோன்றும். இலைகள் பழுப்பு நிறமாக மாறி காய்ந்துபோகும் அல்லது முழுமையாக மஞ்சள் நிறமாகும். இலைகளின் மேற்பரப்பில் நுண்ணிய வலைகள் அல்லது வெளிரிய புள்ளிகள் காணப்படும். செம்பேன் தாக்குதலானது கோடை காலத்தில் அல்லது அதிக வெப்பம் உள்ள காலங்களில் அதிகமாக இருக்கும். எனவே நீர் மேலாண்மையை சரியாகப் பராமரிக்க வேண்டும். ஆரம்பத்தில் வேப்பெண்ணை கரைசல் 3% என்ற அளவில் தெளிக்கலாம். தாக்குதல் அதிகமாக தென்பட்டால் இதனைக் கட்டுப்படுத்திட புரொப்பர்கைட் மருந்து ஏக்கருக்கு 250 மி.லி என்ற அளவில் 200 லி நீரில் கரைத்து ஒட்டுப் பசை சேர்த்து இலைகளின் அடிப்பகுதி முழுவதும் நன்றாக நனையும்படி தெளிக்க வேண்டும். இதனை தேவைப்பட்டால் 7 முதல் 8 நாட்கள் இடைவெளியில் மீண்டும் ஒருமுறை தெளித்து கட்டுப்படுத்தலாம்.

தண்டு துளைப்பான்

குருத்துப்பூச்சி எனப்படும் தண்டு துளைப்பானின் தாக்குதலால் இளம்பயிரில் நடுக்குருத்து வாடிக் காய்ந்துவிடும். கதிர் பிடிக்கும் தருணத்தில் தாக்குதல் ஏற்படின் நெல்மணிகள் பால் பிடிக்காமல், வெண்கதிர்களாக மாறி மகசூல் பாதிப்படைகிறது. இதன் தாக்கு தலைக் கட்டுப்படுத்திட நாற்றுகளை நெருக்கமாக நடுவதைத் தவிர்த்து தேவையான தழைச்சத்தினை மூன்று அல்லது நான்கு தடவையாகப் பிரித்து இடுதல் வேண்டும். முதிர்ந்த நாற்றுகளை நடும் போது நுனியைக் கிள்ளிவிட்டு நடுவதனால் குருத்துப் பூச்சியின் முட்டைக் குவியல்களை அழித்துவிடலாம். விளக்குப் பொறியினை மாலை 6.30 மணிமுதல் இரவு 10.00 மணிவரை ஒளிரவிட்டுக் குருத்துப் பூச்சியின் தாய் அந்துப்பூச்சிகளைக் கவர்ந்தழிக்கலாம்.

இலைச்சுருட்டுப்புழு

இலைச்சுருட்டுப் புழுக்கள் நெற்பயிரின் இலைகளை ஒன்றிணைத்துக் கொண்டு அவற்றிலுள்ள பச்சையத்தை சுரண்டி உண்பதால் இலைகளில் வெள்ளை வெள்ளையாக காணப்படும். இதன் தாக்குதல் வயல் ஓரங்களில் நிழலான பகுதிகளிலும் யூரியா போன்ற தழைச்சத்து உரங்களை அதிகமாக பயன்படுத்திய பகுதி களிலும் மிகுந்து காணப்படும். எனவே வயல் வரப்புகளை சுத்த மாக வைத்துக் கொள்வதன் மூலமாகவும் பரிந்துரைக்கப்பட்ட தழைச்சத்திற்கு அதிகமாக இடாமல் மூன்று அல்லது நான்கு முறை

பிரித்து இடுவதன் மூலமாகவும் இதன் தாக்குதலை கட்டுப்படுத்தலாம். மேலும் பறவை இருக்கைகளை வைத்து பறவைகளை கவர்ந்து புழுக்களை அழிக்கலாம்.

நெல் தண்டு துளைப்பான் மற்றும் நெல் இலைச் சுருட்டுப் புழு தாக்குதலைக் கட்டுப்படுத்திட ஏக்கருக்கு புளுபென்டியமைடு 20 டபுள்யூ ஜி என்ற மருந்து 50 கிராம் (அல்லது) புளுபென்டியமைடு டபுள்யூ/டபுள்யூ எஸ்.சி என்ற மருந்து 20 மிலி (அல்லது) கார்டாப் ஹைட்ரோகுளோரடு 50 எஸ்.பி என்ற மருந்து 400 கிராம் (அல்லது) குளோரான்ட்ரனிலிபுரோல் 18.5 எஸ்.சி என்ற மருந்து 60 மிலி இவற்றுள் ஏதேனும் ஒரு மருந்தினை ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் நீரில் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம் என ஆலோசனை தெரிவித்துள்ளார்.

ஆலங்காயம் கிராமத்தில் பங்கேற்பு ஊரக மதிப்பீடு (PRA) நிகழ்ச்சி நடைபெற்றது!



திருப்பத்தூர், நவ.13 திருப்பத்தூர் மாவட்டம், ஆலங்காயம் கிராமத்தில் பாலாறு வேளாண்மைக் கல்லூரியில் இறுதியாண்டு பயிலும் வேளாண் மாணவர்களின் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, 12.11.26 அன்று பங்கேற்பு ஊரக மதிப்பீடு (Participatory Rural Appraisal PRA) நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியின் மூலம் கிராம மக்களுடன் கலந்துரையாடி, கிராமத்தின் சமூக, பொருளாதார மற்றும் வேளாண் நிலவரங்கள் குறித்து தகவல்கள் சேகரிக்கப்பட்டன. மேலும், சமூக வரைபடம் (Social Map), வள வரைபடம் (Resource Map), கிராமத்தின் முக்கிய வளங்கள், குடிநீர் வசதிகள், சாலைகள், கல்வி மற்றும் சுகாதார வசதிகள் ஆகியவை அடையாளம் காணப்பட்டன.

கிராம மக்களின் பங்கேற்புடன் கிராமத்தின் முக்கிய பிரச்சினைகள், தேவைகள் மற்றும் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் கண்டறியப்பட்டன. இந்த ஊயூபு நிகழ்ச்சி மாணவர்களுக்கு கிராமப்புற மக்களின் வாழ்க்கை முறை மற்றும் வேளாண் சூழ்நிலைகளை நேரடியாக அறிந்துகொள்ள உதவியாக அமைந்தது.

ஆமூர் கிராமத்தில் தேனீ வளர்ப்பு குறித்த செயல்விளக்கப் பயிற்சி!



மதுரை, நவ.13

மதுரை மாவட்டம், மேலூர் வட்டாரம், ஆமூர் கிராமத்தில் தோட்டக்கலைத் துறையின் சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு தேனீ வளர்ப்பு குறித்த செயல்விளக்கப் பயிற்சி 13.11.26 அன்று நடைபெற்றது.

இப்பயிற்சியில் மதுரை வேளாண் அறிவியல் நிலைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் கி.சுரேஷ் கலந்து கொண்டு தேனீ வளர்ப்பு குறித்த செயல்விளக்கப் பயிற்சி அளித்தார்.

பயிற்சியின் போது தேனீ வளர்ப்பின் முக்கியத்துவம், வளர்ப்பு முறைகள், பராமரிப்பு நுட்பங்கள், அதன் மூலம் கிடைக்கும் பயன்கள், எதிர்கொள்ள வேண்டிய இடர்பாடுகள் மற்றும் தேனீ வளர்ப்பில் விவசாயிகள் தவிர்க்க வேண்டிய முக்கியமான தவறுகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், தேனீக்களின் மூலம் பயிர்களில் அயல் மகரந்தச் சேர்க்கையை அதிகரித்து, அதன் வாயிலாக பயிர்களின் மகசூல் மற்றும் தரத்தை மேம்படுத்தும் வழிமுறைகள் குறித்தும் செயல் விளக்கத்துடன் பயிற்சி வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மேலூர் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் புவனேஸ்வரி மற்றும் தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் தென்னகமணி, அகிலன் செய்திருந்தனர். மதுரை வேளாண்மைக் கல்லூரியில் நான்காம் ஆண்டு வேளாண் பட்டப்படிப்பு பயிலும் கிராமப்புற தங்கல் திட்ட மாணவிகள் தேனீ வளர்ப்பு குறித்த பயிற்சி மற்றும் செயல் விளக்கம் சிறப்பாக நடத்து வதற்குத் தேவையான ஏற்பாட்டுப் பணிகளில் ஆர்வத்துடன் உதவி செய்தனர்.

இச்செயல்விளக்கப் பயிற்சியில் ஆமூர் மற்றும் அதன் சுற்று வட்டாரக் கிராமங்களைச் சேர்ந்த 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தலைப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P.Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

டி.ஏ.பி. உரத்திற்கு மாற்றாக சூப்பர் பாஸ்பேட் பயன்படுத்தலாம். எப்படி?



விவசாயிகளால் விரும்பி நிலத்தில் இடும் உரங்களில் டி.ஏ.பி உரமும் ஒன்று. டி.ஏ.பி உரங்கள் தயாரிக்க தேவைப்படும் மூலப்பொருட்களில் ஒன்றான பாஸ்பாரிக் அமிலத்தின் விலை அகில உலக அளவில் அதிகரித்து கொண்டே செல்வ தால் உள்நாட்டில் டி.ஏ.பி உரம் உற்பத்தி குறைந்தது. பெரும் பாலான டி.ஏ.பி உரங்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு மானியத்தில் வினியோகம் செய்யப் படுகிறது. இருந்த போதிலும் சில சமயங்களில் தட்டுபாடு ஏற்படுவதால் அதற்கு மாற்றாக சூப்பர் பாஸ்பேட் (SUPER PHOSPHATE) உள்ளது. இது உள்நாட்டிலே தயாரிக்கப்படு வதால் எளிதாக கிடைக்கிறது. இதில் 16% மணிசத்து (PHOS-PHORUS) மற்றும் கால்சியம், சல்பர் போன்ற நுண்ணூட்ட சத்துகளும் சிறிதளவு உள்ளன.

ஏன் சூப்பர் பாஸ்பேட் இடவேண்டும்?

1) டி.ஏ.பி உரம் விலை அதிகம். இதை அடியுரமாக பயன் படுத்தினால் நெல் வயலில் பாசிகள் படரும். சூப்பர் பாஸ்பேட், யூரியா, பொட்டாஷ் இடுவதால் (தனி உரங்கள்) இடுவதால் பாசிகள் படராது.

2) மண்ணில் டி.ஏ.பி உரம் ஏற்படுத்தும் உப்பு நிலையை விட சூப்பர் இடுவதால் குறைவாக ஏற்படுத்தும்.

3) டி.ஏ.பி உரத்தை விட சூப்பர் பாஸ்பேட் உரத்தை இடுவதால் எண்ணெய் வித்து பயிர்களில் குறிப்பாக நிலக்கடலை, எள், சூரியகாந்தியில் அதிக மகசூல் பெறலாம்.

ஊட்டமேற்றிய தொழு உரம் எப்படி சூப்பர் பாஸ்பேட் கொண்டு தயாரிக்கலாம்?

சாகுபடிக்கு முன்னதாக ஒரு ஏக்கருக்கு 300 கிலோ மக்கிய தொழு உரத்துடன் பரிந்துரைத்த அளவு சூப்பர் பாஸ்பேட் உரத் தினை கலந்து நீர் தெளித்து குவியலாக 30 நாட்கள் வைத்திருந்து

மானாவாரி பயிர்களுக்கு அடியுரமாக இடலாம். இவ்வாறாக ஊட்டமேற்றிய தொழு உரமாக இடுவதன் மூலம் மண்ணில் மணிசத்து கிட்டும் நிலையில் கிடைப்பதுடன் மணிசத்தின் பயன்பாடு அதிகரிக்கிறது. மேலும் பயிர் வறட்சி தாங்கி நன்றாக வளரும்.

ஒரு மூட்டை டி.ஏ.பி.க்கு மாற்றாக (இணையாக) சூப்பர் பாஸ்பேட் எவ்வளவு இடலாம்?

50 கிலோ டி.ஏ.பி உரத்தில் 9 கிலோ தழை சத்தும், 23 கிலோ மணி சத்தும் உள்ளன. இதற்கு இணையாக 3 மூட்டை சூப்பர் பாஸ்பேட் + 20 கிலோ யூரியா இடவேண்டும்.

உயிர் உரங்களில் மணிசத்து உரங்கள் உள்ளனவா?

உயிர் உரங்களில் (BIO FERTILIZERS) மணிசத்து பாஸ்போ பேக்டிரியா உள்ளது. இது திட, திரவ வடிவில் கிடைக்கும். இந்த உரத்தை மண்ணில் / இலைவழியாக தெளிப்பாக பயன் படுத்தலாம். இதை பயன்படுத்தும் போது மண்ணில் கிட்ட நிலை உள்ள மணிசத்து பயிருக்கு எளிதாக கிடைக்க பெறலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாமில் வேளாண் கல்லூரி மாணவர்கள் பங்கேற்பு!



நாமக்கல், நவ.13 நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஊராட்சி ஒன்றியம், மேல்சாத்தம்பூர் ஊராட்சிக்கு உட்பட்ட கல்லாங்காட்டுப் புதூரில் 13.11.26 அன்று சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

இம்முகாமில் பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த இறுதியாண்டு வேளாண் மாணவர்கள் எட்டு பேர், (கோபிகா, ஞானஸ்ரீ, கோகுலப் பிரியா, குருசந்திர பிரபா, ஹபிபா, ஜெய ஸ்ரீ, ஜெர்லின் ஜீது, ஹேமலதா) தங்களது ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (Rural Agricultural Work Experience RAWE) ஒரு பகுதியாகக் கலந்து கொண்டனர்.

இம்முகாமின் முக்கிய நடவடிக்கைகளாக கால்நடைகளுக் கான பொது மருத்துவப் பரிசோதனை, நோய்வாய்ப்பட்ட கால்நடை களுக்குச் சிகிச்சை அளித்தல், குடற்புழு நீக்கம், மலட்டுத்தன்மை நீக்க சிகிச்சை, செயற்கை முறை கருவூட்டல் குறித்த ஆலோசனை, மடிநோய் பரிசோதனை, தாது உப்புக் கலவை வழங்குதல் மற்றும் கால்நடைகளுக்கான நோய்த் தடுப்புத் தடுப்பூசி செலுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப் பட்டன.

மேலும், கன்றுகளின் பராமரிப்பு, கால்நடைகளுக்கான சத்தான தீவன மேலாண்மை மற்றும் தொற்றுநோய்களைத் தடுக்கும் வழிமுறைகள் குறித்து விவசாயிகளுக்கும் கால்நடை வளர்ப் போருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இம்முகாமில் பங்கேற்றதன் மூலம் மாணவர்கள் கால்நடை சுகாதாரம், நோய்த்தடுப்பு முறைகள் மற்றும் கிராமப்புற கால்நடை வளர்ப்பு மேலாண்மை குறித்த நடைமுறை அனுபவங்களைப் பெற்றனர்.

மேலும், கால்நடை வளர்ப்போருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு அவர்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகளை அறிந்து கொள்ளும் வாய்ப்பும் கிடைத்தது.

பெண் விவசாயிகளுடன் பண்ணை வருமான மேம்பாடு குறித்த கலந்துரையாடல்!

சிவகங்கை, நவ.13

காரைக்குடியில் அமைந்துள்ள சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் நான்காம் ஆண்டு மாணவர்கள் தவமுகுந்தன், இதய





எல்சன், காமேஸ்வர், கோடீஸ்வர், சிவா, பிரதீப்குமார் ஆகியோர் ஊரக வேளாண்மைப் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், என்.கோவில்பட்டி கிராமத்தில் பெண் விவசாயிகளுடன் பண்ணை வருமான மேம்பாடு குறித்த சிறு குழுக் கலந்துரையாடல் நிகழ்ச்சியை நடத்தினர்.

இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம், விவசாயிகளின் பண்ணை வருமானத்தை அதிகரிப்பதற்கான பல்வேறு வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன், விவசாயக் குடும்பங்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கான நடைமுறை உத்தி களை எடுத்துரைப்பதாகும்.

இக்கலந்துரையாடலில் பெண் விவசாயிகள் தங்களது தற்போதைய விவசாய நடைமுறைகள், வேளாண்மையில் எதிர் கொள்ளும் சவால்கள், வருமானத்தை அதிகரிப்பதில் உள்ள தடைகள் மற்றும் தங்களுக்குத் தெரிந்த மாற்று வருமான வழிகள் குறித்து கருத்துகளைப் பகிர்ந்துகொள்ள ஊக்குவிக்கப்பட்டனர். மாணவர்களும் விவசாயிகளின் கருத்துகளைக் கேட்டறிந்து, அவர் களின் அனுபவங்களின் அடிப்படையில் பல்வேறு ஆலோசனை களையும் வழங்கினர்.

பயிர் பல்வகைப்படுத்துதல் மற்றும் பயிர்ச் சுழற்சி : ஒரே பயிரை மட்டும் சார்ந்திராமல், மண்ணின் தன்மை மற்றும் உள்ளூர் காலநிலைக்கு ஏற்ற வகையில் பயறு வகைகள், எண்ணெய் வித்துப் பயிர்கள், காய்கறிகள் மற்றும் வணிகப் பயிர்களைச் சாகுபடி செய்வதன் முக்கியத்துவம் குறித்து விளக்கப்பட்டது. மேலும், பயிர்ச் சுழற்சி முறையைப் பின்பற்றுவதன் மூலம் மண்ணின் வளத்தைப் பாதுகாப்பதுடன், உற்பத்தி இழப்பு மற்றும் பொருளாதார அபாயங்களைக் குறைக்க முடியும் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

ஒருங்கிணைந்த பண்ணைய முறை : பயிர் சாகுபடியுடன் கறவை மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு மற்றும் கோழி வளர்ப்பு போன்ற உபதொழில்களை இணைத்து மேற்கொள்வதன் மூலம் விவசாயக் குடும்பங்களுக்கு ஆண்டு முழுவதும் கூடுதல் வருமானம் கிடைக்க வாய்ப்புள்ளது என விளக்கப்பட்டது. மேலும், பண்ணையில் கிடைக்கும் வேளாண் கழிவுகள் மற்றும் பிற வளங்களை முறை யாகப் பயன்படுத்துவதன் மூலம் உற்பத்திச் செலவைக் குறைக்க முடியும் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

மதிப்புக்கூட்டுதல் மற்றும் உணவுப் பதப்படுத்துதல் : விவசாய விளைபொருட்களை நேரடியாக விற்பனை செய்வதற்குப் பதிலாக, அவற்றைக் கொண்டு ஊறுகாய், மாவுப் பொருட்கள், தின்பண் டங்கள் மற்றும் பிற பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களைத்

தயாரித்து விற்பனை செய்வதன் மூலம் கூடுதல் வருமானம் பெறலாம் என விளக்கப்பட்டது. மேலும், பொருட்களின் தரத்தை மேம்படுத்துதல், முறையான பொதியிடுதல் மற்றும் சந்தைப் படுத்துதல் ஆகியவற்றின் அவசியமும் எடுத்துரைக்கப்பட்டது.

வீட்டுத் தோட்டம் அமைத்தல் : வீடுகளில் கிடைக்கும் காலியிடங் களைப் பயன்படுத்தி காய்கறிகள் மற்றும் கீரை வகைகளைச் சாகுபடி செய்வதன் மூலம் குடும்பத்திற்குத் தேவையான காய்கறி களைப் பெறுவதுடன், அன்றாட உணவுச் செலவையும் குறைக்க முடியும் என எடுத்துரைக்கப்பட்டது.

இயற்கை இடுபொருட்கள் தயாரித்தல் : பண்ணையில் கிடைக்கும் வேளாண் கழிவுகள் மற்றும் உள்ளூரில் கிடைக்கக்கூடிய இயற்கை வளங்களைப் பயன்படுத்தி மட்கிய உரம் மற்றும் மண்புழு உரம் போன்ற இயற்கை இடுபொருட்களைத் தயாரிப்பது குறித்து விளக்கப் பட்டது. இதன் மூலம் வெளியில் இருந்து வாங்கும் இடுபொருட் களுக்கான செலவைக் குறைத்து, பண்ணை வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்த முடியும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

கூட்டுச் சந்தைப்படுத்துதல் மற்றும் விவசாயக் குழுக்கள் அமைத்தல் : விவசாயிகள் குழுக்களாக இணைந்து செயல் படுவதன் அவசியம் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. விளைபொருட் களைத் தனித்தனியாக விற்பனை செய்வதற்குப் பதிலாகக் கூட் டாகச் சந்தைப்படுத்துவதன் மூலம் விற்பனைத் திறனை அதிகரிக் கவும், பேரம் பேசும் சக்தியை மேம்படுத்தவும், போக்குவரத்து மற்றும் சந்தைப்படுத்துதல் செலவுகளைக் குறைக்கவும் முடியும் என விளக்கப்பட்டது.

அரசுத் திட்டங்கள் மற்றும் மானியங்களைப் பயன்படுத்துதல் : வேளாண்மைத் துறையின் மூலம் விவசாயிகளுக்குக் கிடைக்கும் பல்வேறு அரசு நலத்திட்டங்கள், மானியங்கள் மற்றும் உதவிகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. தங்களுக்குத் தகுதியான திட்டங்கள் மற்றும் சலுகைகள் குறித்த தகவல்களைப் பெறுவ தற்கும், தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெறுவதற்கும் அருகிலுள்ள வேளாண்மைத் துறை அலுவலர்களை அணுகுமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் உதவி வேளாண்மை அலுவலர் (புபுநு) பீலிக்ஸ் கலந்து கொண்டு, வேளாண் வளர்ச்சிக்கான நடைமுறை ஆலோ சனைகள், பண்ணை வருமானத்தை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் மற்றும் அரசின் வேளாண் உதவிச் சேவைகளைப் பயன்படுத்தும் முறைகள் குறித்து பயனுள்ள தகவல்களைப் பகிர்ந்து கொண்டார். மேலும், விவசாயிகள் தங்களது வேளாண்

பிரச்சினைகளுக்குத் தகுந்த தொழில்நுட்ப ஆலோசனைகளை வேளாண்மைத் துறை அலுவலர்களிடம் பெற்றுக்கொள்வதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

இக்கலந்துரையாடல் மூலம் பெண் விவசாயிகள் தங்களது அனுபவங்களையும் கருத்துகளையும் பகிர்ந்துகொள்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டதுடன், பண்ணை வருமானத்தைப் பல் வேறு வழிகளில் அதிகரிப்பதற்கான நடைமுறை உத்திகள் குறித்தும் விழிப்புணர்வு பெற்றனர். குறிப்பாக, பயிர் சாகுபடியுடன் உபதொழில் களை இணைத்தல், மதிப்புக்கூட்டுதல், இயற்கை இடுபொருட்கள் தயாரித்தல் மற்றும் கூட்டுச் சந்தைப்படுத்துதல் போன்ற வழி முறைகள் விவசாயக் குடும்பங்களின் பொருளாதார முன்னேற்றத் திற்கு உதவக்கூடியவை என்பதை இந்நிகழ்ச்சி எடுத்துரைத்தது.

திருக்கடையூர் வேளாண்மை விரிவாக்க மையத்தில் e-NAM பயிற்சி



மயிலாடுதுறை, நவ.13

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார் கோவில் வட்டாரம், திருக்கடையூர் வேளாண்மை விரிவாக்க மையத்தில் 13.11.26ல் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு e-NAM (தேசிய வேளாண் சந்தை) பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குநர் செந்தில்குமார் கலந்து கொண்டு, e-NAM திட்டத்தின் நோக்கம், மின்னணு சந்தை வர்த்தகத்தின் முக்கியத்துவம், வேளாண் விளை பொருட்களுக்குச் சந்தை விலை விவரங்களை அறிதல் மற்றும் விளைபொருட்களை மின்னணு சந்தை வாயிலாக விற்பனை செய்வதன் நன்மைகள் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் தியாகு, வரவேற் புரையாற்றி, நில உடமைப் பதிவு, உழவன் செயலியின் பயன் பாடுகள், உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்டங்களின் முக்கியத் துவம், அவற்றைப் பயன்படுத்தும் முறைகள் குறித்துத் தெளிவாக விளக்கினார். உதவி வேளாண்மை அலுவலர் பிரபாகரன், வேளாண்மைத் துறையின் பல்வேறு திட்டங்கள், விவசாயிகளுக்குக் கிடைக்கும் நலத்திட்ட உதவிகள் மற்றும் அவற்றைப் பெறுவதற்கான வழிமுறைகள் குறித்து எடுத்துரைத்தார். இப்பயிற்சிக்கான ஏற்பாடு களை உதவி தொழில்நுட்ப மேலாளர் செல்வகுமரன், செய்திருந் தார். பயிற்சியின் நிறைவில் விவசாயிகளுக்கு நன்றியுரை கூறினார். இப்பயிற்சியில் 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு, e-NAM திட்டம் மற்றும் வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்த பயனுள்ள தகவல்களைப் பெற்று பயனடைந்தனர்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

மரவள்ளியில் மறைந்திருக்கும் மதிப்புக்கூட்டுப் பொருட்கள்

(கழிவுகளிலிருந்தும் வருமானம் தரும் புதிய தொழில்நுட்ப வாய்ப்புகள்)

முன்னுரை



தமிழகத்தில், குறிப்பாக சேலம், நாமக்கல், ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களில் மரவள்ளி முக்கியமான வணிகப் பயிராக விளங்குகிறது. இதிலிருந்து ஜவ்வரிசி, மாவு, சிப்ஸ் போன்ற உணவுப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. ஆனால் பதப்படுத்தும் செயல்முறையில் கிடைக்கும் தோல், சக்கை, இலை, தண்டு மற்றும் கழிவுநீரிலும் பயனுள்ள வளங்கள் உள்ளன. இவற்றை அறிவியல் முறையில் பயன்படுத்துவது கூடுதல் வருமானத்தையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் ஒருங்கே வழங்கும்.

1. மரவள்ளித் தோல் மற்றும் சக்கையின் பயன்பாடுகள்:

கிழங்கின் தோல் உரித்தல் மற்றும் மாவுச்சத்து பிரித்தெடுத்தல் செயல்முறைகளில் முறையே தோல் மற்றும் நார்ச்சத்து நிறைந்த சக்கை (Cassava bagasse) கிடைக்கின்றன. உரிய முறையில் பதப்படுத்திய தோல் மற்றும் சக்கையை கால்நடைத் தீவனக் கலவைகளுக்கான மூலப்பொருளாகப் பயன்படுத்தலாம். மேலும் இவை மட்கிய உரம், உயிரியல் உரம் மற்றும் உயிர்வாயு (Biogas) தயாரிப்பிற்கும் பயன்படுகின்றன. சக்கையில் உள்ள நார்ச்சத்தைப் பயன்படுத்தி காகிதம், அட்டைப்பெட்டி மற்றும் உயிரியல் முறையில் சிதையும் பொதியிடும் பொருட்கள் தயாரிப்பதற்கான வாய்ப்புகளும் உள்ளன.

2. மரவள்ளி மாவுச்சத்திலிருந்து தயாரிக்கப்படும் தொழில்துறைப் பொருட்கள்

மரவள்ளி மாவுச்சத்து உணவுத் தொழிலுக்கு மட்டுமல்லாமல் பல தொழில்களுக்கும் முக்கிய மூலப்பொருளாகும். மாற்றியமைக்கப்பட்ட மாவுச்சத்து (Modified starch) காகிதம், துணி மற்றும் உணவுத் தொழில்களில் பயன்படுகிறது. திரவ குளுக்கோஸ் இனிப்புகள் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகளில் பயன்படுகிறது. டெக்ஸ்ட்ரின் மற்றும் மாவுச்சத்து சார்ந்த ஒட்டுப்பசைகள் காகிதம், அட்டைப்பெட்டி மற்றும் பொதியிடும் தொழில்களில் பயன்படுத்தப்படுகின்றன.

மாவுச்சத்தை அடிப்படையாகக் கொண்ட உயிரியல் பாலிமர்கள் மூலம் மக்கும் தன்மை கொண்ட பொதியிடும் பொருட்களை உருவாக்கவும் முடியும்.

3. மரவள்ளி இலை மற்றும் தண்டின் பயன்பாடுகள்



மரவள்ளி இலைகளில் புரதம் மற்றும் தாதுச்சத்துகள் உள்ளன. உரிய முறையில் நச்சுத்தன்மை நீக்கிப் பதப்படுத்திய பிறகு, சில இடங்களில் இலைகள் உணவாகவும் கால்நடைத் தீவன மூலப் பொருளாகவும் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் எரிப் பட்டுப்புழு (Eri silkworm) வளர்ப்பிலும் இலைகள் பயன்படுகின்றன. அறுவடைக்குப் பிறகு மீதமிருக்கும் தண்டுகள் அடுத்த பருவத்திற் கான நடவுக் குச்சிகளாகப் பயன்படுகின்றன; மீதமுள்ள தண்டு களை உரம் மற்றும் உயிரி எரிசக்தி தயாரிப்பிற்கான மூலப் பொருளாகவும் பயன்படுத்தலாம்.

4. தொழிற்சாலைக் கழிவுநீரின் பயன்பாடு

மரவள்ளி மாவு மற்றும் ஜவ்வரிசி ஆலைகளில் உருவாகும் கழிவுநீரில் கரிமப் பொருட்கள் காணப்படுகின்றன. இதனை நேரடியாக வெளியேற்றாமல், முறையான கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் காற்றில்லா உயிரியல் செரிமானம் (Anaerobic digestion) போன்ற முறைகள் மூலம் உயிர்வாயு தயாரிக்கலாம். சுத்திகரிக் கப்பட்ட நீரைப் பாதுகாப்புத் தரநிலைகளுக்கு உட்பட்டு மீண்டும் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளும் உள்ளன.

5. பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கான தொழில்முனைவு வாய்ப்புகள்

மரவள்ளி சார்ந்த மதிப்புக்கூட்டல் கிராமப்புற வேலைவாய்ப்பை உருவாக்க உதவும். பெண்கள் சுயஉதவிக் குழுக்கள் மாவு, சிப்ஸ், அப்பளம், வடகம் மற்றும் நூடுல்ஸ் போன்ற உணவுப் பொருட் களைத் தயாரித்து விற்பனை செய்யலாம். இளைஞர்கள் சிறிய அளவிலான பதப்படுத்தும் அலகுகள், உலர்த்துதல், பொதியிடுதல், இயற்கை உரம் மற்றும் தீவன மூலப்பொருள் தயாரிப்பு போன்ற தொழில்களில் ஈடுபடலாம். தரக் கட்டுப்பாடு, சுத்தம், சரியான பொதியிடல் மற்றும் சந்தைத் தொடர்பு ஆகியவை வெற்றிக்கு அவசியம்.

முடிவுரை

மரவள்ளி ஒரு உணவுப் பயிர் மட்டுமல்ல; பல்வேறு தொழில்களுக் கான மூலப்பொருளையும் வழங்குகிறது. கிழங்குடன் தோல், சக்கை,

இலை, தண்டு மற்றும் ஆலைத் துணைக் கழிவுகளையும் பயனுள்ள பொருட்களாக மாற்றுவதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும் கழிவுகளைக் குறைக்கவும் முடியும். ஆராய்ச்சி நிறுவனங்கள், விவசாயிகள், தொழில்முனைவோர் மற்றும் பெண்கள் சுயஉதவிக் குழுக்கள் இணைந்து இத்தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தினால், மரவள்ளி சார்ந்த நிலையான கிராமப்புறத் தொழில்கள் வளர்ச்சி பெறும்.

தகவல் : ***பெ.தேவிபிரியா, நான்காம் ஆண்டு வேளாண் மாணவி, வேளாண் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், NMV பல்கலைக் கழகம், அருப்புக்கோட்டை-626 101, விருதுநகர் மாவட்டம்.***



புதுக்கோட்டை வட்டார முள்ளூர் கிராமத்தில் கிராம அளவிலான விவசாயிகள் பயிற்சி



புதுக்கோட்டை, நவ.13

புதுக்கோட்டை மாவட்ட உழவர் பயிற்சி நிலையம் மூலமாக 2026-27 ஆம் ஆண்டிற்கான கிராம அளவிலான விவசாயிகள் பயிற்சி, புதுக்கோட்டை வட்டார முள்ளூர் கிராமத்தில் நடைபெற்றது. இந்த பயிற்சியினை வேளாண்மை உதவி இயக்குநர் அ.அபிநயா துவக்கி வைத்து உயிர் உரங்களின் பயன்பாடு, நுண்ணூட்ட சத்துக்களின் முக்கியத்துவம், சம்பா நெல் சாகுபடி தொழில் நுட்பங்கள், தரமான விதை உற்பத்தி செய்வதற்கான தொழில் நுட்பங்கள் பற்றியும் விரிவாக விவசாயிகளுக்கு எடுத்து கூறினார்.

புதுக்கோட்டை எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன வேளாண் விஞ்ஞானி முனைவர் ப.மணிகண்டன், நன்மை செய்யும் பூச்சிகள் மற்றும் தீமை செய்யும் பூச்சிகளை எவ்வாறு கண்டறிவது மற்றும் கட்டுப்படுத்தும் முறைகள், எலி மேலாண்மை முறைகள், ஒருங்கிணைந்த உர மேலாண்மை, சம்பா பருவத்தில் நெல்லில் ஏற்படும் நோய்களை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு தொழில்நுட்ப கருத்துகளை வழங்கினார்.

உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் ந.சண்முகி, எல் நினோ தாக்கம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள், பிரதம மந்திரி கௌரவ நிதியுதவி தொகை, மின்னனு பயிர் சாகுபடி கணக்கெடுப்பு பணி குறித்து விரிவுரையாற்றினார். புதுக்கோட்டை வட்டார வேளாண்மை அலுவலர் ஜி.ரேகா, நுண்ணீர் பாசனத்தின் முக்கியத்துவம் மத்திய அரசு திட்டத்தில் வழங்கப்படும் மானியம், விவசாயிகளுக்கான தனி அடையாள எண், பயிர் விளைச்சல் போட்டி குறித்து எடுத்துரைத்தார். இந்த பயிற்சியின் முடிவில் பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டம் குறித்த துண்டு பிரசுரங்களை புதுக்கோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அ.அபிநயா விவசாயிகளுக்கு வழங்கினார். இப்பயிற்சியின் இறுதியில் வேளாண்மை அலுவலர் (உழவர் பயிற்சி நிலையம்) ந.சண்முகி நன்றியுரை கூறினார்.

இப்கோ நானோ உரங்கள் விழிப்புணர்வு முகாம்

மயிலாடுதுறை, நவ.13

மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்க (PACCS) பணியாளர்களுக்கான உர விற்பனை கட்டமைப்பு (Framework for Fertilizer Sales – FFS) குறித்த பயிற்சி முகாம் நடைபெற்றது. இப்பயிற்சி முகாமில், மயிலாடுதுறைமாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களின் செயலாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.



இந்நிகழ்ச்சியில், இப்கோ கள அலுவலர் பரஞ்சோதி, FFS செயலியின் பயன்பாடுகள் மற்றும் உர விற்பனை நடைமுறை களில் அதன் முக்கியத்துவம் குறித்து விரிவாக விளக்கினார். மேலும், POS இயந்திரம் வாயிலாக உரங்களை விற்பனை செய்வதற்கான வழிமுறைகள், விற்பனை விவரங்களைப் பதிவு செய்தல்மற்றும் FFS வழிகாட்டுதல்களின்படி உர விற்பனையை மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் குறித்தும் செயல் விளக்கத்துடன் பயிற்சி அளித்தார்.

தொடர்ந்து, இப்கோவின் நானோ யூரியா, நானோ டி.ஏ.பி. மற்றும் சாகரிகா உள்ளிட்ட நவீன உரங்களின் சிறப்பம்சங்கள், அவற்றின் பயன்பாட்டு முறைகள்மற்றும் பயிர் வளர்ச்சியில் அவற்றின் பங்களிப்பு குறித்தும் எடுத்துரைத்தார். மேலும், நவீன வேளாண் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடம் கொண்டு சேர்ப்பதிலும், அவர்களுக்கு உரிய தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குவதிலும் PACCS செயலாளர்கள் மற்றும் விற்பனையாளர்களின் முக்கியப் பங்கு குறித்தும் வலியுறுத்தப்பட்டது.

இப்பயிற்சி முகாமின் மூலம் PACCS பணியாளர்களுக்கு FFS செயலி மற்றும் உர விற்பனை நடைமுறைகள் குறித்த புரிதல் ஏற்படுத்தப்பட்டதுடன், இப்கோவின் நானோ உரங்கள் குறித்த விழிப்புணர்வை விவசாயிகளிடையே அதிகரிக்கவும் வழிவகை செய்யப்பட்டது.

குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையம் மூலம் திருவரங்குளம் வட்டார வடகாடு கிராமத்தில் கிராம அளவிலான விவசாயிகள் பயிற்சி



புதுக்கோட்டை, நவ.13

புதுக்கோட்டை மாவட்ட குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையம் மூலமாக 2026-27 ஆம் ஆண்டிற்கான கிராம அளவிலான விவசாயிகள் பயிற்சி திருவரங்குளம் வட்டார வடகாடு கிராமத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியில் வேளாண்மை துறை அலுவலர்கள், வம்பன், வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானி, அம்புலியாறு உழவர் உற்பத்தியாளர் நிறுவன செயல் அலுவலர், உழவர் மன்ற அமைப்பாளர் மற்றும் அன்னை தெரசா கல்லூரி மாணவர்கள் ஆகியோர் கலத்துக் கொண்டனர். இப்பயிற்சியினை வேளாண்மை துணை இயக்குநர் ல.முத்துலட்சுமி, துவக்கி வைத்து நுண்ணூட்டங்களின் முக்கியத்துவம் மற்றும் பயன்கள், மின்னனு பயிர் சாகுபடி கணக்கெடுப்பு பணி குறித்து விரிவாக விவசாயிகளுக்கு எடுத்து கூறினார்.

வம்பன், வேளாண்மை அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் ராம்ஜெகதீஷ், விவசாயிகளுக்கு விதை நேர்த்தி தொழில் நுட்பங்கள், உயிர் உரங்களின் பயன்பாடு, அங்கக வேளாண்மை, நன்மை செய்யும் பூச்சிகளை எவ்வாறு பேணி காப்பது, தீமை செய்யும் பூச்சிகளை கட்டுப்படுத்தும் முறைகள், சம்பா பருவத்தில் நெல்லில் ஏற்படும் நோய்களை கட்டுப் படுத்தும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு தொழில்நுட்ப கருத்துகளை வழங்கினார். திருவரங்குளம் வட்டார வேளாண் அலுவலர் சிவானந்தன், விவசாயிகளுக்கு பயிர் விளைச்சல் போட்டி, பயிர் காப்பீடு செய்தல், பிரதம மந்திரி கௌரவ நிதியுதவி தொகை, விவசாயிகளுக்கு தனி அடையாள எண் வழங்குதல், மத்திய மற்றும் மாநில அரசு திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார். உழவர் மன்ற அமைப்பாளர் ர.இந்திரா, அங்கக முறையில் வேளாண் பயிர்களை சாகுபடி செய்வது மற்றும் மிளகு சாகுபடி குறித்த அனுபவங்களை விவசாயிகளிடம் எடுத்துரைத்தார்.

அன்னை தெரசா வேளாண்மை கல்லூரி இறுதியாண்டு மாணவர்கள் தங்களுடைய கிராமப்புற அனுபவம் குறித்து விவசாயிகளிடம் பகிர்ந்து கொண்டனர். இந்த பயிற்சியின் முடிவில் பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டம் குறித்த துண்டு பிரசுரங்களை வேளாண்மை துணை இயக்குநர் ல.முத்து லட்சுமி, விவசாயிகளுக்கு வழங்கினார். இப்பயிற்சியின் இறுதியில் வேளாண்மை அலுவலர் (உழவர் பயிற்சி நிலையம்) ந.சண்முகி நன்றியுரை கூறினார்.

நீர்மத் தாவர வளர்ப்பு (Hydrophonics) முறையில் மண்ணில்லா விவசாயம் குறித்து விழிப்புணர்வு!



பெரம்பலூர், நவ.13

பெரம்பலூர் மாவட்டம், அம்மாபாளையம் கிராமத்தில், திருச்சி நாளந்தா வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த இறுதி ஆண்டு மாணவர்கள், சு.பாபு, மு.தரணிதரன், கா.தருண், செ.கபீர்தாஸ், சு.நிர்மல்குமார், கு.ராகுல், மு.ரோஹித், ர.சாய்ராம், பா.சஷி காந்த், கோ.சிவக்குமார் மற்றும் தி.தினகரன் ஆகியோர் ஆகியோர், கிராம தங்கல் திட்டம் (RAWE) மூலமாக களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு பிரிவாக, மாணவர்கள் புதுநடுவலூர் கிராம விவசாயிகளுக்கு நவீன வேளாண் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும் நோக்கில், ஹைட்ரோபோனிக்ஸ் எனப்படும் மண்ணில்லா விவசாய முறை /நீர்மத்தாவர வளர்ப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இம்முறையானது மண்ணைப் பயன்படுத்தாமல், தாவரங்களுக்குத் தேவையான ஊட்டச் சத்துகள் கலந்த நீரின் மூலம் பயிர்களை வளர்க்கவும், குறிப்பாக கீரை வகைகள் மற்றும் சில காய்கறிப் பயிர்களை குறைந்த இடத்தில் பயிரிடுவதற்கு இம்முறை மிகவும் உதவுகிறது. அதுமட்டுமின்றி , பாரம்பரிய விவசாய முறைகளுடன் ஒப்பிடும்போது, சரியான மேலாண்மையுடன் செயல்படுத்தினால் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தவும், குறைந்த இடத்தில் அதிக

பயிர்களை வளர்க்கவும் முடியும் என்பதை வேளாண் மாணவர்கள் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர்.

மேலும், ஹைட்ரோபோனிக்ஸ் முறையில் பயிர் வளர்ப்பதற்குத் தேவையான ஊட்டச்சத்துக் கரைசல் தயாரித்தல், நீரின் pH அளவு மற்றும் மின் கடத்துத்திறனை (EC) கண்காணித்தல், பயிர்களுக்குத் தேவையான ஒளி மற்றும் வெப்பநிலையைப் பராமரித்தல் போன்ற தொழில்நுட்ப அம்சங்கள் குறித்து மாணவர்கள் விளக்கமளித்தனர். மழைப்பொழிவு குறைவாக உள்ள பகுதிகளிலும், குறைந்த நிலப்பரப்பைக் கொண்ட விவசாயிகளுக்கும் இத்தொழில்நுட்பம் மாற்று விவசாய முறையாக அமையக்கூடும். எனவே, பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் நவீன வேளாண் தொழில்நுட்பங்களை அறிந்து, தங்களது நிலத்தின் தன்மை மற்றும் பொருளாதார வசதிக்கு ஏற்ப ஹைட்ரோபோனிக்ஸ் முறையைப் பயன்படுத்திப் பயனடையலாம் என வேளாண் மாணவர்கள் வலியுறுத்தினர்.

மீன் அமினோ அமிலம் தயாரித்தல் குறித்த விவசாயிகள் பயிற்சி மற்றும் செயல்விளக்கம்!

சேலம், நவ.13

சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டம், சோமம்பட்டி கிராமத்தில் உள்ள விவசாயிகளுக்கு, பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன்



வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் சார்பில் மீன் அமினோ அமிலம் (Fish Amino Acid) தயாரித்தல், பயன்படுத்தும் முறை மற்றும் அதன் நன்மைகள் குறித்த விவசாயிகள் பயிற்சி மற்றும் செயல்விளக்க நிகழ்ச்சி நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில், மீன் அமினோ அமிலத்தின் முக்கியத்துவம், அதன் தயாரிப்பு முறைகள் மற்றும் விவசாயத்தில் அதன் பயன்பாடுகள் குறித்து மாணவர்கள் விவசாயிகளுக்கு விளக்கினர். மேலும், மீன் கழிவுகள் மற்றும் வெல்லம் ஆகியவற்றைப் பயன்படுத்தி மீன் அமினோ அமிலம் தயாரிக்கும் முறையை படிப்படியாக செயல்விளக்கம் மூலம் எடுத்துரைத்தனர்.

மீன் அமினோ அமிலத்தைப் பயிர்களுக்கு முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் தாவரங்களின் வளர்ச்சியை ஊக்குவித்தல், இலைகளின் பசுமைத் தன்மையை மேம்படுத்துதல், பூக்கும் மற்றும் காய்க்கும் திறனை ஆதரித்தல் போன்ற நன்மைகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. மேலும், குறைந்த செலவில் இயற்கை இடுபொருட்களைத் தயாரித்துப் பயன்படுத்துவதன் மூலம் இரசாயன இடுபொருட்களின் பயன்பாட்டைக் குறைத்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த நிலையான வேளாண்மையை மேற்கொள்ள முடியும் என்றும் விளக்கப்பட்டது.

இப்பயிற்சியின் மூலம் விவசாயிகள் தங்களது வயல்களிலேயே குறைந்த செலவில் இயற்கை இடுபொருட்களைத் தயாரித்துப் பயன்படுத்துவதற்கான நடைமுறை அறிவைப் பெற்றனர். இந்நிகழ்ச்சி விவசாயிகளிடையே இயற்கை வேளாண்மை மற்றும் நிலையான வேளாண்மை முறைகளைப் பின்பற்றுவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
  நிறுவனம்–தரத்தின் தலைப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741